18.12 **ஒரு புதிய மின்கம்பம் அமைக்க நிலையான கட்டணம் ரூ. 9,500/– நிர்ணயித்தல்**

ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி (மாஅதி.3) துறை

அரசாணை (நிலை) எண். 111 நாள் : 26.6.2007

படிக்க :

1. இயக்குநர், ஊ.வ.(ம) ஊ.கடித ந.க. எண். 31804/07/ஞசுஐ3.3, நாள் 24.4.2007.
2. தலைவர், தமிழ்நாடு மின்சார வாரியம்.SE/RE&I(D)/EE/RE/F/St. light/D.894/07, dated 22.5.07.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், 12–4–2007 அன்று சட்டமன்ற பேரவையில் மானியக் கோரிக்கையின் போது, உள்ளாட்சி அமைப்புகளுக்கும், மின்சார வாரியத்திற்கும் தொடர்புடைய சில பிரச்சனைகளை தீர்ப்பதற்கான கீழ்கண்ட அறிவிப்புகளை வெளியிட்டார்கள்.

i) கடந்த ஆட்சியில் தெரு விளக்கு விரிவாக்கப் பணிகளுக்கு ஒவ்வொரு பணிக்கும் தனித்தனி மதிப்பீடுகள் தயார் செய்யும் முறை அறிமுகப்படுத்தப்பட்டதால் புதிய மின்கம்பங்கள் அமைக்க அதிக செலவினமும், கால தாமதமும் ஏற்பட்டது. இந்நிலையை மாற்றி 13.3.2007 முதல் இப்பணிகளுக்கு நிலையான கட்டணமாக ஒரு மின்கம்பத்திற்கு ரூ. 9,500 என நிர்ணயிக்கப்படும்.

ii) உள்ளாட்சி அமைப்புகள் மின்வாரியத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவைக் கட்டணத்தின் மீது விதிக்கப்படும் அபராத வரி 13.3.2007 முதல் 12 சதவீதத்திலிருந்து 6 சதவீதமாக குறைக்கப்படுவதோடு, அதற்கு முன்புள்ள காலத்திற்கான நிலுவையாக உள்ள அனைத்து அபராத வரித் தொகையினையும் தள்ளுபடி செய்யப்படும்.

iii) மின்கட்டணங்களுக்கான கேட்பு பெறப்பட்ட நாளிலிருந்து 20 நாட்களுக்குள், உள்ளாட்சி அமைப்புகள், முழுத் தொகையினையும் செலுத்திட வேண்டுமென்ற கால அளவை 13.3.2007 முதல் 60 நாட்களாக அதிகரிக்கப்படும்.

iv) உள்ளாட்சி அமைப்புகளிலுள்ள அனைத்து மின் இணைப்புகளுக்கும் மீட்டர் பொறுத்துவதற்கும், ஒவ்வொரு மின்கட்டண பட்டியல் வழங்கும் போதும் ஆரம்ப மற்றும் இறுதி மீட்டர் அளவுகளை பதிவு செய்து முறையான பட்டியல் வழங்கப்படும்.

v) தமிழ்நாடு மின்சார வாரியம் கிராம உள்ளாட்சிகளுக்கு தற்போது வழங்கப்படும் மின்கட்டணம் ரூ. 3.40லிருந்து ரூ. 3.00 ஆகவும், நகர்புற ஊராட்சிகளுக்கு ஒரு யுனிட் ரூ.3.50லிருந்து ரூ3.30 ஆகவும் 12.4.07 முதல் குறைக்கப்படுகிறது. இந்த மின் கட்டண குறைப்பு தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், மற்றும் சென்னை பெருநகர குடிநீர் வாரியத்திற்கும் பொருந்தும்.

3. மேலே (ii) முதல் (v) வரை உள்ள அறிவிப்புகள் எரிச்சக்தி துறையினை சார்ந்ததால், அத்துறையால் மேற்கண்ட அறிவிப்புகள் குறித்து தக்க ஆணைகள் வெளியிடப்படும்.

4. படிக்கப்பட்டவை ஒன்றில் உள்ள கடிதத்தில் அறிவிப்பு எண் (ஹ)க்கான கருத்துருவை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசுக்கு அனுப்பியுள்ளார். அவர் தமது கருத்துருவில் தெருவிளக்கு விரிவாக்க பணிகளுக்கு புதிய மின்கம்பங்கள் அமைக்க தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு நிலையான கட்டணமாக ஒரு மின்கம்பத்திற்கு ரூ. 7,800/– என நிர்ணயித்து மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களுக்கும் 1999ம் ஆண்டு முதல் செயல்படுத்த அரசு ஆணையிட்டது என்றும் இத்திட்டம் 2001 வரை நடைமுறையில் இருந்து வந்தது என்றும் தெரிவித்துள்ளார். மாநில நிதி குழு பரிந்துரைப்படி 2003–04 ஆண்டு முதல் மாவட்ட ஆட்சியர் வளர்ச்சி நிதியினை பயன்படுத்தி தெருவிளக்கு மின்கம்பங்கள் அமைப்பதில் நிலையான கட்டணத்தை செயல்படுத்தாமல் அவ்வப்போது நிர்ணயித்து செயல்படுத்தி வந்ததாகவும், இத்திட்டத்தினால் பதிவு கட்டணத்துடன் கேட்டு பெறப்பட்ட கோரிக்கை மனுவை உரிய காலகெடுவுக்குள் வழங்கவும், தமிழ்நாடு மின்சார வாரிய அலுவலர்களால் ஒப்புதல் வழங்க இயலாததினாலும், மேலும் வைப்புநிதியை ஊராட்சிகள் காலதாமதமாக செலுத்துவதினாலும் சில பிரச்சனைகள் ஏற்படுகின்றன என்றும் இப்பிரச்சனையினை தீர்க்க தெருவிளக்கு விரிவாக்க பணிகளுக்கு மின் கம்பங்கள் அமைக்க தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு நிலையான கட்டணமாக ஒரு மின்கம்பத்திற்கு ரூ. 9,500/– என 13.3.2007 முதல் நிர்ணயிக்கப்படும் என்ற அறிவிப்பிற்கிணங்க ஆணை வெளியிடுமாறு அரசை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் கோரி உள்ளார்.

## 18. STREET LIGHTS

5. படிக்கப்பட்டவை 2ல் உள்ள கடிதத்தில் தமிழ்நாடு மின்சார வாரிய தலைவர் அவர்கள் இது சம்பந்தமாக கீழ்க்கண்டவாறு தனது கருத்தினை தெரிவித்துள்ளார்கள்.

அ. தெருவிளக்கு விரிவாக்க பணிக்காகஅமைக்கப்படும் ஒரு மின் கம்பத்திற்கு நிலையான கட்டணமாக ரூ.9,500/– ஆக 13.3.2007 முதல் உள்ளாட்சி அமைப்புகளிலிருந்து தமிழ்நாடு மின்சார வாரியம் வசூலிக்கும்.

ஆ 13.3.2007க்கு முன்னர் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்ட இனங்களிலும், ஏற்கனவே உள்ளாட்சி நிறுவனங்களால் முழுதொகையும் செலுத்தப்பட்ட இனங்களுக்கும் இந்த நிலையான கட்டணம் பொருந்தாது.

இ. 13.3.2007க்கு முன்னர் பகுதி தொகை (Part payment)செலுத்தப்பட்ட இனங்கள் உள்பட பிற இனங்களில் ஒரு மின்கம்பத்திற்கு ரூ. 9,500/– என நிலையான கட்டணம் வசூலிக்கப்படும்.

மேலும் இது குறித்து தக்க ஆணை வெளியிடுமாறும், தமிழ்நாடு மின்சார வாரிய தலைவர் அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

6. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கருத்துருவையும் தமிழ்நாடு மின்சார வாரிய தலைவரின் கருத்தினையும் அரசு கவனமாக பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு அரசு ஆணையிடுகிறது.

அ. தெருவிளக்குகள் விரிவாக்க பணிக்காக புதிய மின் கம்பிகள் தடத்துடன் குழல் விளக்கு, மற்றும் பொருத்திகள் உடனும் அவை தேவைப்படாத இடங்களில் அவை இன்றியும் புதிதாக அமைக்கப்படும். தெருவிளக்குகளுடன் கூடிய மின்கம்பங்கள், மற்றும் தெருவிளக்கு இல்லா புதிய மின்கம்பங்கள் ஆகியவற்றிற்கு 13.3.2007 முதல் ஒவ்வொரு மின்கம்பத்திற்கும் நிலையான கட்டணமாக ரூ.9500ஐ உள்ளாட்சி அமைப்புகள் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்த வேண்டும். இக்கட்டணம் தமிழ்நாடு மின் வாரியம் மேற்கண்ட பொருட்களை உரிய இடத்தில் கொண்டு சேர்த்து நிறுவும் செலவுகளையும் உள்ளடக்கியதாகும்.

ஆ. 13.3.2007க்கு முன்னர் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டு அதன் பேரில் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு அதன் விவரம் உள்ளாட்சிகளுக்கு தெரிவிக்கப்பட்ட இனங்களுக்கும் ஏற்கனவே உள்ளாட்சி நிறுவனங்களால் இதற்கு முழுத்தொகையும் செலுத்தப்பட்ட இனங்களுக்கும் தற்போது நிர்ணயிக்கப்பட்டுள்ள இந்த நிலையான கட்டணம் பொருந்தாது. 13.3.2007க்கு முன்னர் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டு இதுவரை அவற்றிற்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு அவை உள்ளாட்சி அமைப்புகளுக்கு தெரிவிக்கப்படாத இனங்களை பொறுத்தவரை தற்போது நிர்ணயிக்கப்பட்டுள்ள இந்த நிலையான கட்டணத்தின்படி கட்டணம் வசூலிக்க வேண்டும்.

இ. 13.3.2007க்கு முன்னர் பகுதி தொகை (Part Payment) செலுத்தப்பட்ட இனங்கள் உள்பட பிற இனங்களில் ஒரு மின் கம்பத்திற்கு ரூ. 9,500/– என நிலையான கட்டணம் வசூலிக்கப்படவேண்டும்.

ஈ. ஏற்கனவே மின் கம்பி தடம் இருந்து, ஆனால் தெருவிளக்குகள் இல்லாமல் உள்ள கம்பங்களில் புதிதாக தெரு விளக்குகளை அமைத்தல், அல்லது ஏற்கனவே உள்ள பல்புகள், குழல் விளக்குகள் போன்றவற்றிற்கு பதில் பாதரச ஆவி/சோடியம் ஆவி விளக்குகள் ஆகியவற்றை புதிதாக பொருத்துதல் போன்ற இனங்களில், சம்பந்தப்பட்ட உள்ளாட்சிகள் மேற்கண்ட உபகரணங்களை கொள்முதல் செய்து அளித்திட வேண்டும். இவ்வாறு மாற்றுவதற்காக நடைமுறையில் உள்ள ஊதியத்தை சம்பந்தப்பட்ட உள்ளாட்சிகள் மின்வாரிய பணியாளர்களுக்கு வழங்கிட வேண்டும்.

7. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் மற்றும் தலைவர், தமிழ்நாடு மின்சார வாரியம் அவர்கள் இதுகுறித்து தேவையான தொடர் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

8. இவ்வாணை நிதித் துறை அலுவல் சார்பற்ற எண். 1800/5/07 நாள் 3.6.2007 பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க.அஷோக் வர்தன் ஷெட்டி**
அரசு செயலாளர்